பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 06 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம்-மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சமூக நீதியை காக்கும் அரசாக தமது அரசு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் உள்ள காவல்நிலையங்களில் மக்களுக்கு பாதுகாப்பில்லை என்ற நிலை உருவாகியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் எட்டு பேரை மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதன் முழுக் கொள்ளளவை எட்டியதை அடுத்து உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

சமூக நீதியை காக்கும் அரசாக தமது அரசு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (1) 66 செகண்ட்ஸ்)

அவசர நிலையை பிரகடனம் செய்தவர்கள், ஜனநாயகத்தை படுகொலை செய்ததோடு, நீதித்துறையையும் தங்களது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - மோடி (2) 53 செகண்ட்ஸ்)

மகளிர் தற்போது தங்களுக்காக மட்டுமின்றி சமூகத்திற்கும் வழிகாட்டியாக திகழ்கிறார்கள் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மோடி (3) 65 செகண்ட்ஸ்)

அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - மோடி (4) 60 செகண்ட்ஸ்)

உடல் ஆரோக்கியத்தின் பாதுகாவலர்களாக மருத்துவர்களும் பொருளாதாரத்தின் வழிகாட்டிகளாக பட்டய கணக்காளர்களும் திகழ்வதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (5) 33 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் உள்ள காவல்நிலையங்களில் மக்களுக்கு பாதுகாப்பில்லை என்ற நிலை உருவாகியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டம், திருபுவனம் காவல்நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்த செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறையின் இந்த அராஜகப் போக்கு கண்டனத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், கண்டுகொள்ளாமல் இருப்பதன் விளைவே அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கு காரணம் என்று அவர் குறை கூறியுள்ளார்.

தமிழகத்தில் அதிகாரிகளும், காவல்துறையினரும் அதிகாரத்தை தன்னிச்சையாக கையில் எடுத்துக் கொண்டு, அத்துமீறி செயல்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினர் தங்களது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பொதுமக்கள் மீது அடக்குமுறையாக செலுத்துவது நியாயமாகாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இளைஞர் உயிரிழந்த சம்பவத்திற்கு காவல்துறையும், தமிழக அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்றும், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு உரிய நீதி கிடைக்க தேவையான நடவடிக்கைகளை திரு. மு.க.ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் எட்டு பேரை மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்த நிலையில், மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை மீட்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதன் முழுக் கொள்ளளவை எட்டியதை அடுத்து, 16 கண் மதகுகள் வழியாக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – விஜயகுமார் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டியில் புதிய நியாயவிலைக் கடையினை வணிகவரித்துறை அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>>>><<<<<<**

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின், கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-8, 12-10, 11-9 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Yoshiyama – Mende** இணையை வென்றது.

**>>>>>>END<<<<<<**